மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நன்றி, நன்றி. (குறுக்கீடு) போதும். மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. செல்வபெருந்தகை அவர்கள்.*

திரு. கு. செல்வபெருந்தகை: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1,000 கோடி ரூபாய் செலவில் அரசுக் கல்லூரி மேம்பாட்டுத் திட்டத்திற்கு 'பெருந்தலைவர் காமராசர் கல்லூரி மேம்பாட்டுத் திட்டம்' என்று பெயரிட ஆணை வழங்கிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு காங்கிரஸ் பேரியக்கத்தின் சார்பாக (மேசையைத் தட்டும் ஒலி) மனமார்ந்த நன்றியையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்கிறோம்.*

முற்பகல் 11–50

அதேபோன்று, 1961 ஆம் ஆண்டு M.C. *ராஜா விடுதி கட்டப்பட்டது. 75,000 சதுர அடியில் 40 கோடி ரூபாயில் நவீன மாணவர் விடுதி கட்டப்படவிருப்பது உண்மையிலேயே நெகிழ்ச்சியாக இருக்கிறது. எங்களுடைய அரசியல் வாழ்க்கையே* M.C. *ராஜா விடுதியிலிருந்துதான் ஆரம்பித்தது. மீண்டும் ஒருமுறை நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

13. துபாய் சர்வதேச தொழில் கண்காட்சியில் தமிழக அரங்கைத் தொடங்கி வைத்தல் மற்றும் தொழில் முதலீடுகளை ஈர்க்க வெளிநாடுகளில் பயணம் மேற்கொள்ளும் முதலமைச்சருக்கு வாழ்த்து

திரு. கு. செல்வபெருந்தகை: *'திரைகடல் ஓடியும் திரவியம் தேடு' என்று தமிழர்கள் ஒவ்வொருவரையும் நிதி திரட்டச் சொல்கிறார்கள், நம் முன்னோர்கள். ஆனால், தமிழகம் அனைத்துத் துறைகளிலும், குறிப்பாக பொருளாதாரத்தில் உயர்ந்த இடத்தில் இருக்க வேண்டுமென்று உலக முதலீட்டாளர்களைத் தேடி முதலமைச்சராக தனது முதல் அரசு சார்ந்த வெளிநாடு பயணத்தை கடல் கடந்து மேற்கொள்ளவிருக்கும் மாண்புமிகு தமிழக முதல்வருக்கு நெஞ்சார்ந்த வாழ்த்துகளையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறோம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதல் முறையாக நம்முடைய முதலமைச்சர் அவர்கள், முதலமைச்சராகி தமிழ்நாட்டு மக்களுடைய ஒட்டுமொத்தமான*

அபிமானத்தையும் பெற்று, இந்திய துணைக் கண்டத்தில் இருப்பவர்களெல்லாம் வியந்து பாராட்டுகிற அளவுக்கு ஆட்சியை நடத்தி, அவ்வளவு பெரிய பெருமை பெற்றிருக்கிறவர் தன்னுடைய நாட்டு வளர்ச்சிக்கு நண்பர்கள் சொன்னதைப்போல் வெளிநாடுகளில் இருக்கிற செல்வந்தர்கள், தொழிலதிபர்களை ஈர்ப்பதற்காக தானே முன்வந்து, ஆயிரம் வேலைகள் இங்கு இருக்கிறபொழுது, அவரே அடியெடுத்து கடல் கடந்து இன்றையதினம் துபாய் நாட்டுக்குச் செல்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி) பல்வேறு தொழிலதிபர்களோடு பல புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கையெழுத்திடயிருக்கிறார். முதலமைச்சர் அவர்களே பல நாட்டு சர்வதேசர்கள் கூடுகிற துபாயில் புரிந்துணர்வு ஒப்பந்தங்களைப் போடுகிறார் என்றால் அது உலகச் செய்தியாகும். ஆகவே, உலகத்திலுள்ள பல்வேறு பகுதிகளில் இருப்பவர்களையும் தமிழகம் ஈர்க்கும்; தமிழகத்திற்கு வருவார்கள். எனவே, இந்தத் தமிழகத்தை கல்வியில், சுகாதாரத்தில் மற்றும் ஏழ்மையிலிருந்து விடுவிப்பது, தொழில் துறையில் முன்னேற்றுவது என்று எல்லாத் துறைகளிலும் இந்த 10 மாத காலத்தில் 10 அல்ல, 100 ஆண்டுக் கால அனுபவத்தோடு செய்வதைப்போல செய்திருக்கிறார். நான் மனமாரப் பாராட்டுகிறேன்; என் நெஞ்சம் மகிழ்கிறது. எங்கள் தலைவர் கலைஞர் மட்டும் இன்றைக்கு இருந்திருந்தால் மற்றவர்கள் பார்ப்பதற்கு முன்னால் தன் கண்ணீரை அவர் வடித்து அதைத் துண்டில் துடைக்கிற காட்சி; எப்படி கண்ணீர் விட்டுத் துடைப்பார் என்பதை நினைத்துப் பார்க்கிறேன். அவர் இல்லை, ஆனால் இந்த மன்றத்தின் உறுப்பினர்கள், முதல்வர் மட்டுமல்ல, அவருடைய அண்ணனாக நான் நினைத்துக்கொள்கிறேன். எனவே, நானே அத்தனைபேர் சார்பிலும் இந்த அவையின் சார்பிலும் முதல்வர் அவர்களே, (மேசையைத் தட்டும் ஒலி) உங்கள் பயணம் வெற்றிபெற வேண்டும். தமிழ்நாட்டுக்கு நீங்கள் செய்யும் தொண்டு வளர வேண்டும். நீங்கள் இந்திய நாட்டில் மட்டுமல்லாது, உலகப் புகழ் பெற வேண்டுமென்று இந்த மாமன்றம் மனதார வாழ்த்தி உங்களை வழியனுப்புகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) உங்கள் அனைவர் சார்பிலும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு மன்றத்தின் தனி அனுமதி பெற்று பொன்னாடை அணிவிக்கிறேன். தனி அனுமதி பெற்றுக்கொள்கிறேன். மன்றத்தின் சார்பிலும், எல்லோருடைய சார்பிலும் பொன்னாடை அணிவிக்கிறேன்.

(மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குப் பொன்னாடை அணிவித்தார்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *எல்லா உறுப்பினர்களும் பேசினால் நேரம் அதிகமாகும். ஒரு நிமிடத்தில் சொல்லுங்கள். நம்முடைய முதல்வர் அவர்களுடைய வெளிநாட்டுப் பயணத்திற்கு ஒரு நிமிடத்தில் வாழ்த்துச் சொல்லுங்கள். அதை மட்டும் சொல்லுங்கள், வேறு விஷயங்கள் வேண்டாம். மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.பி. நாகைமாலி, தேவையெனில் ஒரு நிமிடத்தில் வாழ்த்துச் சொல்லுங்கள்.*

12. வரவு—செலவுத் திட்டம் மற்றும் வேளாண்மை நிதிநிலை அறிக்கை, 2022–2023, பதிலுரை—*தொடர்ச்சி*

திரு. வி.பி. நாகைமாலி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதிநிலை அறிக்கைமீதும், வேளாண் நிதிநிலை அறிக்கைமீதும் மாண்புமிகு உறுப்பினர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு,. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், அந்த அலுவல் முடிந்து, அவை முன்னவர் அவர்கள், மாண்புமிகு முதலமைச்சரின் வெளிநாடு பயணத்திற்கு வாழ்த்து சொல்லிவிட்டார். ஒரு வரியில் வாழ்த்து மட்டும் சொல்லுங்கள்.*

திரு. வி.பி. நாகைமாலி: *இரண்டே நிமிடங்களில் முடித்துவிடுகிறேன். தனித்தனியாக இந்த வினாக்களுக்கு சிறப்பான முறையில் பதிலளித்திருக்கிற. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. நாகைமாலி, முடியுங்கள். (குறுக்கீடு) சொல்லுங்கள்.*

திரு. வி.பி. நாகைமாலி: *ஒரு நிமிடம்தான், ஒரு நிமிடம்தான்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் முடித்துவிடுங்கள்.*

முற்பகல் 11—55

திரு. வி.பி. நாகைமாலி: *மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு வேளாண் துறை அமைச்சர் அவர்களுக்கும் நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். மதுரை மாவட்டம், அலங்காநல்லூர் சர்க்கரை ஆலையைத் திறக்க வேண்டும் என்று அங்கிருக்கிற விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் நீண்ட நாட்களாக கோரிக்கை எழுப்பி வருகிறார்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் போதும். (குறுக்கீடு) அந்த அலுவல் முடிந்துவிட்டது. (குறுக்கீடு) நீங்கள் அதை எழுதிக் கொடுங்கள், முடித்துத் தருவார்கள்.*